28th February 1966]

சில பகுதிகள் அரசாங்கத்தின் உடைமைக்கும் உரியதாக இருப்பதினால் தனிப்பட்டவர்களுடைய இடமாக இருந்தாலும் சரி, அரசாங்கப் பொறுப்பில் உள்ள பகுதிகளாக இருந்தாலும் சரி, இனிமேல், தற்செயலாக விழுந்த மரங்களை வெட்டுவது அன்றி, கரிக்காக அல்லது விறகுக்காக என்று வெட்டக் கூடாது என்று நிரந்தரமாக தடை உத்தரவு ஒன்று போட அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மலைப் பிராந்தியங்களில் மரங்களை வெட்டுவது என்றால் அரசாங்கத்தினுடைய அனுமதி இன்றி வெட்டக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டம் கண்டிப்பாக அமல் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் குற்றாலத்திலே கூட சில மரங்களை முதிர்ச்சி அடைந்த பிறகு அவற்றை வெட்டி விட்டு மீண்டும் செடிகள் வைக்க வேண்டியிருக்கிறது. விறகும் தேவையாக இருக்கிறது. விறகுக்கு என்று மரங்களை வைத்தால் அவை முதிர்ச்சி அடைந்த பிறகு வெட்டி விட்டு வேறு மரங்களை வைக்கவேண்டியிருக்கிறது. குற்றாலத்தைப் பொறுத்தவரை சில ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. நீர் வீழ்ச்சியில் வருகிற அருவித் தண்ணீர் மருத்துவத் தன்மை உடையதாக இருக்கிறது. அந்த மருத்துவத் தன்மை அங்குள்ள மரங்கள், செடிகள் அவற்றின் மூலம் வருவதால் ஏற்படக் கூடியது என்ற எண்ணத்தோடு அந்த மெயின் ஃபால்ஸின் மேலே உள்ள மரங்களை, ஐந்தருவிக்கு மேலே உள்ள மரங்களை வெட்டவே கூடாது என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, while felling these trees, generally tamarind trees are being cut and sold for the purpose of making charcoal. So, will the Government consider the desirability of issuing instructions to Collectors to see that the tamarind trees are not cut ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : மரங்களை வெட்டுவதற்கு கூப்புகள் கொடுத்தாலும்கூட புளிய மரங்களை வெட்டக் கூடாது என்பது விதி. ஆகவே, புளிய மரங்கள் வெட்டப்படுவதில்லை.

ஆசிரியர்களை மாற்றுதல்

* 135 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆசிரியர்கள் மாற்றம் சம்பந்தமாக ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி பிறப்பித்தக் கட்டளையை மீறி வடாற்காடு மாவட்டம், அரக்கோணம் பஞ்சாயத்து தலைவரிடமிருந்து அண்மையில் அரசாங்கத்திற்கு மனு ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களை மாற்றுவது போன்ற காரியங்களில் அந்த அதிகாரம் யாரிடம் இருக்கிறது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : யூனியன் அடிப்படையில் அட்ஹாக் கமிட்டி ஒன்று இருக்கிறது. வருட ஆரம்பத்தில் அவர்கள் எல்லாம் கூடி நியாயமான அளவில் செய்யக் கூடிய டிரான்ஸ்பர்களைப் பற்றி முடிவு எடுத்துக் கொள்ளலாம்.

புலவர் கா. கோவிந்தன் : இந்த அட்ஹாக் கமிட்டி பொதுவாக ஏப்ரல் மாதத்தில் ஆண்டுக்கு ஒரு முறை கூடவேண்டுமென்று விதி வந்திருக்கிறது. அந்த கமிட்டி செய்த முடிவு தவறானது என்று அந்தக் கமிட்டியில் இருக்கிறவர்கள் உணர்ந்தால் மீண்டும் கூடி அந்த முடிவை மாற்ற விதிகளில் இடமிருக்கிறதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அட்ஹாக் கமிட்டியின் முடிவிற்கு மேல் ஸ்தல நிர்வாகத் துறையின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

திரு. ம. கமலநாதன் : சென்ற ஆண்டிலிருந்து இந்த அட்ஹாக் இந்த கமிட்டியே டிரான்ஸ்பர் செய்யவேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. இந்த முறையினால் டிரான்ஸ்பர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறதா ? அல்லது இடைக்காலத்தில் டிரான்ஸ்பர் செய்யக் கூடாது என்ற தடை விதிக்க மட்டும்தான் இந்தக் கமிட்டிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக் கிறதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : வட ஆற்காடு மாவட்டம், அரக்கோணம் பஞ்சாயத்து தலைவரிடமிருந்து சர்க்காருக்கு அண்மையில் மனு ஏதேனும் வந்ததா என்பது கேள்வி. பொதுவாக அங்கத்தினர் அவர்கள் போடக் கூடிய கேள்விக்கு பதில் அளிக்கவேண்டுமென்றால் தனிக்கேள்வி வேண்டும். அப்படித் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் எல்லாம் சேகரித்து பதில் அளிக்கலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : பொதுவாக அந்தந்த சேர்மனுக்குள்ள அதிகாரம் உபாத்தியாயர்களை மாற்றுவதுதான். கலெக்டரிடம்கூட சிபார்சு செய்து, எஜுகேஷன் ஆபீசர்களிடம் கூட சிபார்சு செய்து எப்படியாவது மாற்றவேண்டுமென்று ஏற்பாடு செய்கிறார்கள். ஆகவே, இந்த உபாத்தி யாயர்கள் விஷயத்தில் இம்மாதிரி ஆண்டுக்கு ஒரு ஆர்டர் போட்டு மாற்றக் கூடாது என்ற ஒரு ஆணை பிறப்பிக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அட்மினிஸ்ட்ரேட்டிவ் இன்கன்வீனி யன்ஸ் சில சமயங்களில் ஏற்படலாம்; தவிர்க்க முடியாத **காரணங் களினால்** ஒன்றிரண்டு மாறுதல்கள் செய்யக் கூடிய நிலைமை ஏற் படலாம். அப்படி ஏற்படும்போது கலெக்டர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர் நடவடிக்கை எடுக்கலாம். நடுவில், வருட மத்தியில், டிரான்ஸ்பர் செய்யக்கூடாது என்ற தடை விதிக்கவில்லை.

பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டடங்கள்

* 136 கேள்வி—**திரு. சி. கோதண்டராம பாகவதர் :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு ஜில்லாவில் சொந்தமாக அலுவலகக் கட்டடங்கள் இல்லாத பஞ்சாயத்து யூனியன்கள் எவை, எவை ?

(இ) அவைகள் கட்டும் உத்தேசம் உண்டா ?

(உ) ஆம் எனில், எப்போது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) (1) அனக்காவூர், (2) குடியாத் தம், (3) கஸ்தம்பாடி, (4) தெள்ளார்.

(இ) & (உ) அனக்காவூரில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டடம் கட்டுவதை மேற்கொள்ளுமாறு முன்னமேயே உத்தரவு வழங்கப்பட் டுள்ளது. குடியாத்தத்திலும், தெள்ளாரிலும் பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. கஸ்தம்பாடி பஞ்சாயத்து யூனியன் தலைமையிடம் குறித்துச் சென்னை உயர் நீதி மன்றத்தில் முடிவுறாமல் இருக்கும் மனுவின் மீது தீர்ப் பளிக்கப்பட்ட பின்னரே கஸ்தம்பாடியில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டடம் கட்டும் வேலை மேற்கொள்ளப்படும்.

புலவர் கா. கோவிந்தன் : இந்த அனக்காவூர் பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டடம் கட்ட முன்பு ஒரு முறை பஞ்சாயத்து முடிவு எடுத்து அதற்கான உத்திரவுகளும் பிறப்பிக்கப்பட்டுவிட்டன. பிறகு செல்வாக்குள்ளவர்கள் சிலர் தலையீட்டால் அந்தக் கட்டடம் கட்டுவது நிறுத்தப்பட்டது. இப்போது மீண்டும் அதற்கு சர்க்கார் அனுமதி அளித்து அது தொடங்கப்படும் நிலை இருப்பதால் மீண்டும் அதில் தலையீடு